# குருவாயூரப்பா சரணம்

கோவில் முன்னே கூடி நின்று கோடி ஜன்ம பாபம் தீர
குருவாயூரப்பா நமஸ்காரம் செய்கின்றோம்

திருமேனி தரிசனம் நிர்மால்யமாகவே கண்டு
கிரிதரன் உன்னை நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

சந்தனகாப்பு கழற்றி தைலம் பூசிக் கொண்டு நிற்கும்
நந்தகோபாலனே நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

எண்ணை ஸ்நானம் செய்து கையில் வாழைப்பழத்தோடே
நிற்கும் கண்ணன் உன் பாதத்தில் நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

குடம் குடமாய் பாலை அபிஷேகம் செய்யும் வேளை
கோவிந்தனே உன்னை நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

கொண்டை மயில் பீலி மின்ன மஞ்சள் பட்டு கட்டிக்கொண்டு
குழலூதும் கிருஷ்ணா நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

தெச்சி மந்தாரம் துளசி தாமரைப் பூ மாலை சாத்தி
அச்சுதனே உன்னை நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

திவ்ய நாமம் சொல்லிக் கொண்டு சீவேலியில் சுற்றி வந்து
ஸ்ரீதரா உனக்கு நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

தீரா வினை தீர்த்து வைத்து கோரும்வரம் அளித்திடும்
நாராயணா உன்னை நமஸ்காரம் செய்கின்றோம் [கோவில்]

ஸ்ரீ கிருஷ்ணா சரணம் !!
ஸ்ரீ குருவாயூரப்பா சரணம் !!